மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை

கிருஷ்ணகிரி மாவட்டம்

முன்னிலை : திரு.சி. ராஜசேகர்.,பி.ஏ.,பீ.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி

2018-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18- ஆம் நாள் செவ்வாய்கிழமை

அசல் வழக்கு எண்.58/2018

---------

கே. சென்னையன் .. வாதி

//எதிராக//

சிவராஜ் .. பிரதிவாதி

இவ்வழக்கு 12.12.2018 அன்று என் முன்னர் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிக்காக வழக்கறிஞர் திரு.எம்.முருகேசன், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் திரு.எம். மாதேஸ்வரன், அவர்கள் ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்து பின்னிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டு ஒருதலைப்பட்ச உத்தரவிடப்பட்டும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என் ஆய்வில் இருந்ததுமான இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்:

## தீர்ப்புரை

1. தாவா புரோநோட்டு தொகை ரூ.60,000/- மற்றும் பின் வட்டி மற்றும் நீதிமன்ற செலவுத்தொகை கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதியின் வழக்குரை சுருக்கம்:

பிரதிவாதி,ரூபாய்.60,000/- தொகையை அவரது குடும்ப செலவுக்காக வேண்டி வாதியிடமிருந்து 26.06.2016-ல் கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ரூ.100/-க்கு ரூ.1.00 வீதம் சேர்த்து கூடிய வட்டியையும், அசலையும் வாதி வேண்டும்போது வாதிக்காவது அல்லது வாதியின் உத்தரவு பெற்றவருக்காவது ரொக்கமாக செலுத்துவதாக ஒப்புக்கொண்டு பிரதிவாதி தாவா புரோநோட்டினை ஆனந்துார் கிராமத்தில் வைத்து சாட்சிகள் முன்னிலையில் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், வாதி பிரதிவாதியிடம் பலமுறை நேரில் அணுகி 20.06.2016-ல் பெற்ற கடனை திருப்பி செலுத்தக் கேட்டும், 17.02.2018 தேதியில் பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பி, மேற்படி சட்ட அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டும் யாதொரு பதில் அறிவிப்பு அனுப்பாமலும், பிரதிவாதி கடனை திரும்ப செலுத்தாமல் இருந்து வந்ததால் வாதியால் இவ்வழக்கு தாவா கடன் தொகை, பின் வட்டி மற்றும் செலவுத்தொகைக்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், பிரதிவாதி வாதியிடம் 20.06.2016 அன்று பெற்ற கடன் குறித்து தனியாக நடவடிக்கை துவக்க இருப்பதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் வக்காலத்து தாக்கல் செய்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டு ஒருதலைப்பட்ச உத்தரவிடப்பட்டுள்ளது.

4. வாதி தரப்பில் வாதியே வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

வாதி தரப்பில் வாதியே வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக 20.06.2016 தேதியிட்ட கடனுறுதிசீட்டு அசல் வா.சாஆ.1 ஆகவும், 17.02.2018 தேதியிட்ட பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 17.02.2018 தேதியிட்ட சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டதற்கான அஞ்சல் ரசீது வா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>5. விவாதம்:</u>**

வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆன 20.06.2016 தேதியிட்ட கடனுறுதிச்சீட்டின் அசலினை பரிசீலிக்கையில் பிரதிவாதி வாதியிடமிருந்து 20.06.2016-ம் தேதியன்று ரூ.60,000/- பணத்தை கடனாக பெற்றுக்கொண்டதற்கு மாதம் 1-க்கு ரூ.100/-க்கு ரூ.1.00 வீதம் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு தாவா புரோநோட்டு வா.சா.ஆ.1 ஐ ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. வா.சா.1-ன் வாய்மொழி சாட்சியம் மற்றும் வழக்குரை சங்கதி ஆகியவை வா.சா.ஆ.1-ன் பொருண்மைகளுடன் ஒன்றுக்கொன்று பொருந்தி அமைந்துள்ளது. எனவே வாதி தரப்பு வா.சா.ஆ.1 ஆவணத்தையும், அதன் பொருண்மையையும் தகுந்த முதல் நோக்கு எழச்செய்து நிரூபித்துள்ளது.

வா.சா.ஆ.1 தாவா புரோநோட்டு ஆவணத்தின் அடிப்படை கூறுகளில் ஒன்றான கடனை திரும்ப தறுமாறு வேண்டும்போது தருவதாக ஒப்புக்கொண்ட உட்கூறினை பிரதிவாதி மீறியிருப்பது வா.சா.ஆ.2, 3 ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. மேற்படி ஆவணங்களின் வாயிலாக வழக்கு மூலம் எழுந்திருப்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது. எனவே வாதி தாவா கடன்

சங்கதி குறித்து வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் மெய்ப்பித்திருப்பதும், பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகாமலும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும் தனது வழக்கை நிரூபிக்க தவறியிருப்பதும் இங்கு தெளிவாகிறது. **Sivaprakasam Vs Dhandapani 2012 Vol 5 CTC 395** என்ற வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றமானது, வாதி கடனுறுதிச்சீட்டினை பிரதிவாதி நிறைவேற்றிக் கொடுத்தார் என்பதை நிரூபித்தல் போதுமானது என்றும், அவ்வாறு நிரூபிக்கப்பட்டால் **Under Section 118 (a) of Negotiable Instrument Act**, -ன் படி பிரதிவாதி அதனை மறுக்காமலோ அல்லது பொய்ப்பிக்காமலோ இருக்கும் வரையில் பிரதிவாதிக்கு எதிராகவே அனுமானம் மேற்கொள்ள இயலும் என்றும் விளம்பியுள்ளது இங்கு கவனத்தில் கொண்டு பணிந்து பின்பற்றுகிறது.

மேற்படி விவாதத்தின்படி வாதியிடமிருந்து பிரதிவாதி கடன் பெற்றுள்ளார் என்பது நிரூபணமாகிறது. எனவே வாதி தாவா கடன் சங்கதி குறித்து மெய்ப்பித்திருப்பதால் வாதிக்கு அவர் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. இவ்வழக்கின் வழக்குரையின் பரிகாரப் பத்தியில் வாதி தாவா புரோநோட்டுதொகை மற்றும் பின்வட்டி ஆகியவை என்று மட்டுமே தெரிவித்துள்ளார். அதில் 20.06.2016 முதல் 20.06.2018 வரையிலான வட்டித்தொகையான ரூ.14,400/- விடுபட்டுள்ளது. ஆனால் வாதி வழக்குரை சங்கதிகளில் அதனை தெளிவாக குறிப்பிட்டு மேற்படி வட்டித்தொகையான ரூ.14,400/-க்கும் சேர்த்து நீதிமன்ற கட்டணம் செலுத்தியிருப்பதால் வாதிக்கு மேற்படி வட்டித்தொகையும் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

எனவே இவ்வழக்கானது பிரதிவாதி, வாதிக்கு தாவா தொகையான ரூபாய். ரூ.74,400/-ஐ யையும், தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து, தீர்ப்பாணை தேதி வரை ரூபாய்.60,000/-க்கு, 9 சதவிகித வட்டியுடனும், தீர்ப்பாணை நாளிலிருந்து வசூலாகும் நாள் வரை 6 சதவிகித வட்டியுடனும், தாவா வழக்கு செலவுத்தொகையுடன் செலுத்தவேண்டுமென தீர்ப்புரை பிறப்பிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலி வடிவில் சொல்லப்பட்டு அவரால் வரி வடிவில் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2018-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஊத்தங்கரை**

**<u>வாதி தரப்பு சாட்சி:</u>**

வா.சா.1 .. சென்னையன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>:**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1/20.06.2016 | கடனுறுதிசீட்டு அசல் |
| வா.சாஆ.2/17.02.2018 | பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3/17.02.2018 | சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டதற்கான அஞ்சல் ரசீது |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி: இல்லை</u>**

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணம் : இல்லை</u>**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஊத்தங்கரை**